# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## மலையக மக்களின் வாக்குரிமை

**பகுதி II**

**18**

1930 களின் பிற்பகுதியில் மலையகத் தொழிலாளர்களை அவர்கள் வேலை செய்த தொழிற்சாலைகள், நிறுவனங்களிலிருந்து வேலை நீக்கம் செய்து இந்தியாவுக்கு நாடு கடத்துவதில் சிங்கள இனவாதிகள் வெற்றிகண்டனர். அதுபோல் மலையாள வணிகர்களுக்கும்- சிறிய தேநீர்க்கடை உரிமையாளர்களுக்கும்- நேரடியாகவும், மறைமுகமாகவும் நெருக்குதல்களைக் கொடுத்து 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்கின்ற கணக்கில் அவர்களாகவே இந்தியாவுக்கு திரும்பிச் சென்று விடும் நிலையைத் தோற்றுவித்தனர்.

மலையாளிகளுக்கு எதிரான இந்த நடவடிக்கைகளை அந்நியர்களுக்கு எதிராக மண்ணின் மைந்தர்கள் நடத்தும் போராட்டம் என்ற எண்ணமே அக்காலத் தமிழ் தலைவர்களிடம் இருந்தது.

சிங்கள இனவாதிகள்- இந்தப் போராட்டத்தில் தமிழ் 'ஐயா' மாரையும் துணைக்கழைத்த போது இவர்களுக்கு உச்சி குளிர்ந்து விட்டது.

1936-ல் வெளிவந்த 'வீரயா' என்ற ஏடு மலையாளிகள், தமிழ் ஐயாமாரையும் புறக்கணிக்கிறார்கள் என்று முதலைக் கண்ணீர் வடித்தது.

'(மலையாளிகளின் சாப்பாட்டுக்கடைகளில்) மலையாளிகளுக்கு சிறப்பாக ஒதுக்கப்பட்ட தட்டுக்களும் குவளைகளும் இருந்தன. வேறு இனத்தவர்களான சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் வேறு தட்டுகள் வைக்கப்பட்டன. ஒரு சிங்கள ஐயாவும், தமிழ் ஐயாவும் இந்தக் கடைகளுக்குச் சென்றால், அங்குள்ள பணியாள் 'இரண்டு ஐயாமாருக்கு 'தேநீர்' என்று குரல் கொடுப்பான். தேநீர் தயாரிப்பவனுக்கு வந்திருப்பவர்கள் மலையாளிகள் அல்ல. வேற்றினத்தவர்கள் என்பதை அவன் இதனால் இனம் புரிய வைப்பான்.' (வீரயா 16 - ஏப்ரல் 1936)

ஆனால் உண்மையில் மலையாளச் சமூகம் ஒரு சாதியச் சமூகமாகும். அக்காலத்தில் சிங்கள சமூகத்திடம் இருந்தது போன்ற சாதி வேறுபாடுகள் மலையாளச் சமூகத்திடமும் இருந்தது. தனித்தட்டு, தனிக்குவளை என்பது இன அடிப்படையைக் கொண்டதல்ல, அது சாதிய அடிப்படையைக் கொண்டதாகவே இருந்தது. ஒரு மலையாளியால் இன்னொரு மலையாளியை இன்ன சாதிக்காரன் என்று சுலபமாக அடையாளங் காண முடிந்ததுபோல் தமிழர்களையோ, சிங்களவர்களையோ அடையாளம் காண முடியாததால் பல மலையாள உணவு மற்றும் சாயாக்கடைகளில் அவர்களுக்கென தனித் தட்டுகளும், குவளைகளும் இருந்தது உண்மையே. இதே நடைமுறை 'சிங்கள ஐயா' மார்களினதும், 'தமிழ் ஐயா' மார்களினதும் வீடுகளிலும் கடைகளிலும் அந்தக் காலத்தில் கண்டிப்பான நடைமுறையாக இருந்ததென்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய ஒள்றாகும்.

மலையாளிகளுக்கு எதிராக பௌத்த சிங்கள இனவாதிகள் தேர்ந்தெடுத்த 'மண்ணின் மைந்தர்கள் கோட்பாடு அடுத்த கட்டமாக மலையகத் தமிழர்கள் மீது பிரயோகிக்கப்பட்டது.

1911-ம் ஆண்டு இலங்கையில் இருந்த இந்தியத் தமிழர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 30 ஆயிரமாகும், அப்போது இலங்கையின் மொத்தச் சனத்தொகை 41 இலட்சமாகும்.

1921-ம் ஆண்டு இந்த எண்ணிக்கை 6 இலட்சத்துக்கு 2 ஆயிரமாக அதிகரித்தது. இவர்களில் 5 இலட்சத்து 36 ஆயிரம் பேர் தோட்டத் தொழிலாளர்களாவர். அந்தக் காலகட்டத்தில் இவ்வாறு இந்தியத் தமிழர்கள் தோட்டத் தொழிற்துறைக்கு கொண்டு வரப்படுவதையிட்டு சிங்கள இனவாதிகள் அச்சங்கொண்டிருந்த போதிலும் அவர்களது வருகையை தடுத்து நிறுத்தும்படியோ, அவர்களை திருப்பி அனுப்பும்படியோ கோரவில்லை.

ஆனால்- தோட்டத் தொழிலாளர்கள், ஒருங்கிணைக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கமாக இருந்ததாலும், இடது சாரிக்கருத்துக்கள் சிறீலங்காவிலும் பரவ ஆரம்பித்து விட்டதாலும், குறிப்பாக இடதுசாரித் தலைவர்கள் அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் ஊடுருவி வேலை செய்ய ஆரம்பித்து விட்டால் தமது அரசுக்கு அது பாரிய அச்சுறுத்தலாக அமைந்துவிடும் என்று பயந்த பிரித்தானிய அரசு, தோட்டத்தொழிலாளர்கள் இடது சாரித்தலைவர்களின் கருத்துக்களைக் கேட்டு புரட்சிப்போராட்டம் என்றெல்லாம் இறங்குவதற்கு முன்பாகவே அவர்களை பாராளுமன்ற அரசியலுக்குள் இழுத்து விட முனைந்தது.

1927-ம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு 'நாட்டில் நிலையான அக்கறை உடையோர் அல்லது நாட்டில் நிலையாக வசிப்போர் ஆகியோருக்கு வாக்குரிமை' என்ற அடிப்படையில் முதன்முதலாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்க சிபார்சு செய்தது.

1928-ம் ஆண்டு இந்த விடயத்தையிட்டு சட்டசபையில் இருந்த ஒரே ஒருவரைத் தவிர மற்ற எல்லோருக்கும் சிங்களவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக குமுறி எழுந்தனர்.

டி.எஸ் சேனநாயக்கா 'சிங்களவர்கள் துரதிர்ஷ்டம் பிடித்த சமூகத்தினர், அவர்களுடைய தாராள மனப்பான்மை மறைக்கப்பட்டு தவறாக விளங்கப்பட்டுள்ளனர். மற்றவர்களின் நன்மைக்காக தம்மை ஒறுப்பதற்குச் சம்மதிக்கும் சிங்களவர்கள் போன்று வேறு ஒரு சமூகம் இருக்குமென நான் எண்ணவில்லை. இந்தியர்களுக்கு ஒரு பெரிய நாடு உள்ளது. எங்களுக்கு இச்சிறு துண்டு நிலமே உள்ளது. இந்த நாடு வேண்டும்' (8 நவம்பர் 1928 கன்சாட்) என்று கூறினார்.

வி.டி.எஸ். விக்கிரமநாயக்கா என்பவர், 'கொழும்பில் வசிக்கும் இந்தியரை விட தோட்டக் கூலிக்கு நான் மிகவும் அஞ்சுகிறேன். இந்தியத் தொழிலாளி காலையில் 6 மணிக்கு வேலைக்குப்போய் மாலை 6 மணிக்கே தனது கூலி லயன்களுக்கு திரும்புகிறான். இத்தீவில் நிகழ்வன பற்றி அவனுக்கென்ன தெரியும்? எனவே அரசியல் விடயங்களில் வாக்களிக்கும் உரிமை அவனுக்கு இல்லைஎன்றே கூறுவேன்,' (2 நவம்பர் 1928 கன்சாட்) என்று வாதிட்டார்.

சி.டபிள்யூ கன்னங்கரா என்பவர் 'இந்தியர்களின் வாக்குரிமையை எதிர்க்காதவர்கள் துரோகிகள்' (9 நவம்பர் 1928 கன்சாட்) என்று மறைமுகமாகக் குறிப்பிட்டார்.

தொழிற்கட்சி அங்கத்தவராக இருந்த சி.எச்.சற். பெர்ணாண்டோ என்பவரே சட்டசபையில் இந்தியத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுவதை ஆதரித்த ஒரே ஒரு சிங்களத் தலைவராவார்.

ஒரு மலையாளியால் இன்னொரு மலையாளியை இன்ன சாதிக்காரன் என்று சுலபமாக அடையாளங் காண முடிந்ததுபோல் தமிழர்களையோ, சிங்களவர்களையோ அடையாளம் காண முடியாததால் பல மலையாள உணவு மற்றும் சாயாக் கடைகளில் அவர்களுக்கென தனித் தட்டுகளும், குவளைகளும் இருந்தது உண்மையே.

பிற்காலத்தில் தீவிர இனவாதியாக மாறிய ஏ.ஈ குணசிங்கா, தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று வாதிட்டதும், ஒரு முக்கியமான விடயமாகும்.

குடாநாட்டுத் தமிழ் தலைவர்கள் யாரும் இந்த விடயத்தில் பெரிதாக கருத்துத் தெரிவிக்கவில்லை.

சிங்களத் தலைவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து எதிர்த்த போதும், சிறீலங்காவைத் தாயகமாகக் கொண்டோர், அல்லது 5 வருடங்கள் வாழ்ந்து கல்வி, சொத்து, வருமானத் தகுதி கொண்டோர், அல்லது 5 வருடங்கள் தொடர்ச்சியாக வசித்து மேலும் தொடர்ந்து வசிக்கும் நோக்குடைய 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் 'வாக்களிக்கும் உரிமை'யைப் பிரித்தானிய அரசு வழங்கியது.



1931-ம் ஆண்டு நடந்த சிறீலங்காவின் முதலாவது பொதுத் தேர்தலில் தோட்டத் தொழிலாளர்கள் உற்சாகமாக வாக்களித்தனர். அந்தத் தேர்தலில் தலவாக்கலை தொகுதியில் எஸ்.பி.வைத்திலிங்கம் என்பவரும், ஹட்டன் தொகுதியில் பெரிய சுந்தரம் என்பவரும் மலையகத் தமிழர்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். இதில் பெரிய சுந்தரம் அன்றைய அரசில் தொழில்-கைத்தொழில் வர்த்தக மந்திரியாக பதவி வகித்தார்.

இக் காலகட்டத்தில் மலையகத்தில் நடேசையர் முதலாக தொழிற்சங்கம் ஒன்றை அமை-த்து மலையக மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு ஊட்டுவதற்கு மிகவும் பாடுபட்டார்.

தோட்டத் துரைமாரினதும், பிரித்தானிய அரசினதும், நெருக்கடிகள் கண்காணிப்புகள் மத்தியிலும், அவர் மாறுவேடங்களில் தோட்டங்களுக்குச் சென்று தொழிலாளர்களைச் சந்தித்து உரையாடி வந்தார். துணி வியாபாரி, சோப்பு சீப்பு, கண்ணாடி, அலங்காரப் பொருட்கள், வியாபாரி என்று பல்வேறு வேடங்களில் அவர் தோட்டங்களுக்குச் சென்று தொழிலாளர்களை தொழிற் சங்கங்களில் இணைத்து வந்தார்.



**- நக்கீரன்**